1982 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திடம் இதற்கான பரிசீலனைகள் ஒப்படைக்கப் பட்டு, அங்கு அதற்கான ஆராய்ச்சிகள் ஒரு வல்லுநர் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. 2—3 வாகனங்கள் பரீட்சார்த்தமாக இந்த எரிபொருளைப் பயன்படுத்தி ஓட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 5 வண்டிகள் தேவை என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்யப்பட்டு இருக்கிறது. ரூபாய் 5 இலட்சம் வரை அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தீவிரமான ஆராய்ச்சி முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முடிவின் அடிப்படையில் அதற்கு ஏற்ப முடிவுகள் மேற்கொள்ளப் படும்.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, எரி சாராயத்தின் மூலம் தயாரிக்கப்படும் எரி பொருளைக் கொண்டு மோட்டார் வாகனங்கள் ஓட்டப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று மின்சாரம் தட்டுப் பாடாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தும் யந்திரங்களையும் ஓட்டுவதற்கு இந்த எரிபொரு ளைப் பயன்படுத்த அரசு பெரிய திட்டத்தை ஏதேனும் ஆய்வு செய்து இருக்கிறதா? அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற் படும் என்று தெரிந்தால், அதை அமல்படுத்த அரசு தீவிரம் காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஆராய்ச்சி இப்போது முதல் பகுதியிலேதான் இருக்கிறது. அது முடிவுற்ற பின்னாலே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பற்றி முடிவு செய்யலாம்.

சிறு சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 642—திரு. செ. செம்மலை, வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூட்டுறவுத் துறையில் சிறு சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசால் தயாரிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அத்தகைய ஆலைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுக் திட்டத்தில் இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகளையும், 3 சிறிய சர்க்கரை ஆலைகளையும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு இருக் கிறது. அதற்கான இடம் தேர்வு போன்ற பணிகள் நடைபெறு கின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புவதோடு, அந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து விட்டதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவது என்ற அரசின் முடிவிற்கிணங்க ரூ. 3 கோடியே 40 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரிய ஆலையும் 1,250 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலையாக அமைக்க சுமார் 9 கோடி ரூபாய் ஆகும். 500 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைக்க சுமார் 4—5 கோடி ரூபாய் வரையாகும். ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி சொல்ல விரும்புகிறேன். திருத்தணியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்காக மத்திய அரசிடம் நாம் கேட்டு இருந்த அனுமதி 20 ஆம் தேதி வந்து விட்டது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற ஆலைகள் அமைப்பது குறித்தும் நாம் தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுபோன்ற சர்க்கரை ஆலை அமைக்க தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அரசின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பொதுத்துறையிலே, கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை அமைக்க இயலாது என்கிற இடங்களில் தனியார்கள் சர்க்கரை ஆலை துவங்க விண்ணப்பம் செய்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்கிற அரசின் முடிவுக்கு ஏற்ப சுமார் இதுவரையில் 5 மனுக்கள் பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய இடங்களில் இருந்து வந்து இருக்கின்றன. அவற்றையும் மத்திய அரசுக்கு முறையாகப் பரிசீலித்து அனுப்பி இருக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகள், 3 சிறிய சர்க்கரை ஆலைகள் முறையே 1,200 டன் பிழி திறன் கொண்டது மற்றும் 500 டன் பிழி திறன் கொண்டது—நிறுவுவதற்கு இடங்கள் தேர்வு செய்வது ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் செய்யாறு கோட்டத்தில் பெரிய அளவில் கரும்பு பயிரிடும் விவசாயிகள் இப்போது வேலூருக்கோ, அல்லது ஆம்பூருக்கோ தான் அவர்கள் உற்பத்தி செய்த கரும்பை எடுத்துச் செல்ல வேண்டி

யிருக்கிறது. ஆகவே, ஒரு சர்க்கரை ஆலை செய்யாறு கோட்டத்தில் அமைக்க அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளிலே கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் எங்கே எக்னாமிகலி வயபிள்ளாக அந்த ஆலை இயங்கும் என்று கருத இடம் இருக்கிறதோ, அங்கே அமைக்க அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கைக்கு அருகில் கிடைக்கும் கிராபைட் கனிமம்

*வினா எண் 643— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கைக்கு அருகில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் கனிமம் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அக்கனிமத்தை வெட்டி எடுத்து அப் பகுதியில் தொழிற்சாலை துவங்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை அருகில், கிடைக்கும் கிராபைட் கனிமத்தை கல்ந்தெடுத்து, அதனைப் பயன்படுத்தி கிராபைட் சம்பந்தப்பட்ட உற்பத்தி பொருட்களை தயாரிக்க சுமார் 2 கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சிவகெங்கை பகுதியில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தின் மதிப்பு எவ்வளவு? அளவு எவ்வளவு? கிராபைட்டில் இருந்து பெறப் படும் உப பொருள்கள் யாவை?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 மீட்டர் ஆழத்திற்கு மொத்தம் 2.5. இலட்சம் டன் கிராபைட்டு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கிராபைட்டிலேயிருந்து வெப்பம் தாங்கி கருவி போன்ற பல்வேறு துணைப் பொருள்களை தயாரிப்பதற்கான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.